698

# STORY TELLING
## AND
# ACTION SONGS
## SECOND PART

SCANNED

# கதைகளும் பாட்டுகளும்
## இரண்டாம் பாகம்

OFFICE OF THE ... 2 AUG 1935 MADRAS

BY

**S. PICHUMANI AYYAR**

*Assistant*

*Government Secondary Training School, Tinnevelly*

SCANNED

S. R. SUBRAMANIA PILLAI
BOOK-SELLER & PUBLISHER
TINNEVELLY JUNCTION

[Price 4 As.

TB
031(2)
N34
68701.

# கதைகளும் பாட்டுகளும்

படங்களுடன்

## இரண்டாம் பாகம்

திருநெல்வேலி கவர்ன்மெண்ட் செக்கண்டரி
டிரெய்னிங் ஸ்கூல் உதவி ஆசிரியர்
S. பிச்சுமணி அய்யர்
தொகுத்தது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
MADRAS

பிரசுரகர்த்தர்
எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை
திருநெல்வேலி ஜங்ஷன்

ரிஜிஸ்தர் செய்தது]

[விலை 4 அணா

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை-600 008.
88701

PRINTED AT
THE ROYAL PRINTING WORKS
MOUNT ROAD, MADRAS.

2357
894·8111
TB
031(27)
N34

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 AUG 1936
MADRAS

# FOREWORD

The author of this book "Stories and action songs—Illustrated," is known to be a most successful and devoted teacher of children. He has done a great service to teachers and children in Elementary schools, by making a choice collection of simple and interesting stories and presenting them in a most suitable form. The stories are fully illustrated so that they may in the first instance be elicited from children by Picture Reading. The author has also rendered the stories in the form of musical compositions, adopting some of the most familiar and pleasing tunes, so that children may be taught to sing them as songs, accompanying them with suitable actions and gestures. He has indicated how Reading, Drawing, Singing and Acting, Moral Instruction and Manual Occupations can be brought into easy and

natural correlation in the teaching of stories to children. There are not enough books of this kind to help the teacher in his work and this book exhibits a merit all its own, as it contains material tested in actual experience and found to be excellently adapted to children.

K. S. APPASWAMI AYYAR,
*District Educational Officer,*
*Tinnevelly District.*

STATION : TINNEVELLY,
*Dated 11th January 1934.*

# முன்னுரை

இப்புத்தகத்திலுள்ள 'கதைகளும் பாட்டுக்களும்' திருநெல்வேலி செக்கன்டரி போதனுமுறைக் கலாசாலையில் பயின்றுவரும் பாலர்களுக்குப் பல வருஷங்களாய் வகுப்புக்களில் போதிக்கப்பட்டுப் பல வித்யா இலாகா அதிகாரிகளுடைய நன்குமதிப்பைப் பெற்றிருக்கின்றன. பாட்டுக்கள் யாவும் பல வர்ண மெட்டுக்களில் கூடுமானவரை பதங்கள் இலகுவாக்கப்பட்டும் கூடியவரை ப்ராஸங்கள் (Rhymes) வரும்படி இசைக்கப்பட்டும் அமைக்கப்பட்டிருக்கின்றன. கதைகளை விளக்கக்கூடிய சித்திரங்கள் பிள்ளைகள் இலகுவாய்க் கதைகளை அறிந்துகொள்ளும்பொருட்டுப் பல பாகங்களாய்ப் பிரிக்கப்பட்டு, எளிதில் யாவரும் வரையும்படி அமைக்கப்பெற்றிருக்கின்றன.

பல உபாத்தியாயர்களுடைய விருப்பத்திற்கிணங்க இப்பாடங்கள் புஸ்தக ரூபமாய் வெளியிடப்பட்டிருக்கின்றன.

கடவுள் வாழ்த்து, ராஜவாழ்த்து, பாலர்களின் சன்மார்க்கங்கள் முதலியவைகளுக்காகச் சில குறிப்பிட்ட பாட்டுக்கள் பல வர்ண மெட்டுக்களில் அமைக்கப்பட்டு இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இம்மாதிரி வெளிவந்த புத்தகங்கள் வெகு சிலவேயாதலால் இதை யாவரும் ஆதரிப்பார்கள் என்று நம்புகிறேன்.

இப்புத்தகத்தை ஆதரிக்கும் பல வித்யாபிமானிகளுக்கும் என் அன்பார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

ஆக்கியோன்.

# உபாத்தியாயர்கள்
# கவனிக்க வேண்டிய விஷயங்கள்

பள்ளிக்கூடங்களில் சிறுவர்கள் கற்கும் கட்டாயமான பாடங்களில் வாசகபாடம் ஒன்று. அதை இலகுவாயும் நன்றாயும் போதிப்பதற்குக் 'கதையும் பாட்டும்' மிகவும் உதவியாயிருக்கும். இப்பாடங்களைக் கற்பிக்கும்பொழுது பிள்ளைகளுக்கு அதிக உற்சாகமும், புதிய விஷயங்களை அறிந்து கொள்வதில் ஆவலும், ஞாபகசக்தியும், உற்றுப் பார்க்கும் சக்தியும், அபிநயிக்கும் சக்தியும், பாஷா ஞான மும் விருத்தியாகின்றன.

பிள்ளைகள் கதைகளைத் திரும்பச் சொல்லும்பொழுது தங்கள் வீட்டுப்பழக்கத்திலுள்ளபடியே விஷயங்களை வெளி யிடுவார்கள். அப்பொழுது அவர்கள் வெளியிடும் கொச் சையான வார்த்தைகளைச் சரியானபடி திருத்திக்கொடுக்க உபாத்தியாயருக்குச் சந்தர்ப்பம் ஏற்படுகிறது.

சாதாரணமாகப் பிள்ளைகள் எந்தப் படத்தைப் பார்த் தாலும் உடனே அவர்கள் மனம் அதில் பூர்ணமாய் ஈடுபட்டு வெகு நேரம் வரையில் அதையே உற்று நோக்கிக்கொண்டி ருப்பார்கள். படங்கள் எதைதை வெளியிடுகின்றன என் பதைப் பாலர்கள் படங்களின் பல பாகங்களிலிருந்தும் அறிந்துகொண்டு தாங்களே விஷயங்களை வெளியிடுவார்கள். விஷயங்களை நிகழ்காலத்தில் சொல்வார்கள். படம் பார்த்து வாசித்தல் முடிந்த பிறகு, உபாத்தியாயர் கதையைச் சென்ற காலத்தில், சிறு சிறு வாக்கியங்களாக இடையிடையே படத் தின் பல பாகங்களைச் சுட்டிக் காட்டிப் போதித்தால், கதை பிள்ளைகள் மனத்தில் நன்றாய்ப் பதிவதோடு, அவர்களும் இலகுவாய் அதைத் திரும்பச் சொல்வார்கள்.

சம்பாஷணை ரூபமாயுள்ள சில கதைகள் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இக்கதைகளும் இக்கதைகளுக்குரிய பாட்டுக்களும் பாலர்களுக்கு விசேஷ உற்சாகத்தை அளிக்கும்.

சம்பாஷணைரூபமான விடங்களில் பிள்ளைகள் ஒருவருக்கொருவர் நேரில் பேசுவதுபோலவே (Direct speech) இருக்கும்படி கதைகளைச் சொல்லச் செய்யவேண்டும். கதைகளை அபிநயிக்கும்பொழுதும் அபிநயப் பாட்டுக்கள் சொல்லும்பொழுதும் இச்சம்பாஷணைச்சக்தி மிகவும்தெளிவாய்ப் பிள்ளைகளுக்குப் புலப்படும். ஆகவே இப்பாடங்கள் வாசக பாடத்துக்குப் பேருதவியாயிருக்கும்.

பல நீதிகளையும் இப்பாடங்கள் மூலமாய்ப் பிள்ளைகள் கற்றுக்கொண்டு தாமாகவே நல்வழியில் நடக்கத் தயாராகிறார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாகச் சங்கீதம் பாலர்கள் மனத்தைப் பரவசப்படுத்தி அவர்களை அதிக உற்சாகப்படுத்தும். இதை உத்தேசித்தே 'கதையும் பாட்டும்' என்ற பாடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவைகள் மூலமாய்ப்பாலர்கள் அடையும் மனோற்சாகம் எல்லாப் பாடங்களையுமே சந்தோஷத்துடன் கற்கும்படி துணை செய்கிறது.

இப்பாடங்களைப் போதித்த பிறகு இவைகளை மற்றப் பாடங்களோடு சம்பந்தப்படுத்தித் தொடர்முறைப் பாடங்கள் நடத்தலாம். உதாரணமாகக் கதையில் வரக்கூடிய பதங்களை முதல் வகுப்புக்கு வாசகபாடமாகவும், வாக்கியங்களை மேல் வகுப்புக்கு வாசகபாடமாகவும் நடத்தலாம். இப்படியே கணக்கு, இயற்கை, பூகோளம், சித்திரம், கிண்டர்கார்ட்டன் தொழில்கள் முதலிய பாடங்களை இவைகளோடு சம்பந்தப்படுத்தித் தொடர்முறைப் பாடங்கள் நடத்தலாம்.

ஆக்கியோன்.

# கடவுள் வாழ்த்து

## I

நினைப்பதெப்போது நெஞ்சே ' என்ற மெட்டு.

பல்லவி

ஈசனைப் பணிந்திடுவோம்—எந்நேரத்திலும்
ஈசனைப் பணிந்திடுவோம்.

சரணம்

1. இகத்திலே வாழ்வது அவர் கிருபையல்லவோ
அகத்திலே அவரைநாம் அன்புடன் நினைப்போம் (ஈ)
2. அன்புடன் அவர்பாதம் அனுதினம் தொழுதுநாம்
இன்பங்கள் பலவற்றை அடைந்திடுவோமே (ஈ)

---

## II

' நமஸ்தே ' என்ற மெட்டு.

பல்லவி

ஈசனைப் பணிவோம் நாம் இடைவிடாமல் பக்தியுடன்

சரணம்

1. அன்பர் நாமெல்லோரும்கூடி இன்பவடிவான ஈசன்
பொன்னடிகளைப்போற்றிநல்லபதவியடையப்பாடுவோம்
2. நன்மைதரும் நேசனைநாம் நாடிடுவோம் பணிவுடன்
தின்மைஒன்றும் வந்திடாமல் துணைசெய்வோனைத் துதிப்
[போமே. (ஈ)

---

## ராஜ வாழ்த்து

### I

‘ இங்கிலீஷ் நோட் ’ மெட்டு

1. மன்னன் வாழ்கவே ஜார்ஜ் மன்னன் வாழ்கவே
இங்கிலத்தில் இன்னலின்றி இனிதாய் வாழ்கவே.

2. அன்னை மேரியும் அவர் அருமை மக்களும்
எந்நாளுமே இன்பங்களை ஏற்று வாழ்கவே.

3. இந்தியாவையும் மற்றும் இதர நாட்டையும்
சந்தோஷமாய்ச் செங்கோல் மிகச் செலுத்தி வாழ்கவே.

---

### II

‘ நான்முகன் நாவில் வசிக்கும் நாயகி ஸரஸ்வதி ’ என்ற மெட்டு.

1 ராஜ ராஜ ராஜ ராஜ ராஜ ராஜன் வாழ்கவே.
ராஜ ராஜ ராஜ ராஜ ராஜ ராஜன் வாழ்கவே—ராஜ

2 எங்கள் ஐந்தாம் ஜார்ஜ் மன்னன் இந்தியாவை ஆளவே
மங்களம் பெருகியவர் மகிமையுடன் வாழ்கவே—ராஜ

3 அன்னை மேரி ராணியாரும் அவருடைய மக்களும்
இன்னலொன்றும் இல்லாமலே இப்புவியில் வாழ்கவே-ராஜ

4 ஆங்கில அரசாட்சியில் அகிலமெல்லாம் கீர்த்தியாம்
செங்கோல் செலுத்தி நம்மைச் சீருடனே ஆளவே-ராஜ

---

# பாலர்களின் சன்மார்க்கப் பாட்டுகள்

'நாத பிந்து' என்ற மெட்டு

1. ஆதியந்த மில்லாத மாதேவனின்
பாதம் பணிந்து போற்று வோம் அனுதினம்
யாது துன்பமும் வாரமலேயவர்—
அருள் பெறவே.

2. முன்னாள் நாம் செய்த புண்ணிய பாவம்போல்
இந்நாள் அநுபவம் ஏற்படு மாதலால்
என்னவானாலும் இன்னலென் றெண்ணாமல்—
ஏற்று மகிழ்வோமே.

3. பெற்றோர் பெரியோர்கள் பகர்ந்திடும் மொழிகளை
உற்றுக்கேட்டு நாம் உணர்வுடன் நடப்போமே
குற்றம் யாதொன்றும் புரியாமலே உயர்—
குணம் கைக்கொள் வோமே.

---

'ஆதி மூலமான விக்னேச்வரா நமோ' என்ற மெட்டு.

1. ஆதியந்தமில்லா ஈசன் அருளைப் பெற்றிடப்
பாதங்களைப் பூஜித்து நாம் போற்றுவோம் தினம் (ஆ)
2. பாலர் நாமெல்லோரும்கூடிப் பக்தி பண்ணுவோம்
காலைப் பாடம் துவக்கும்முன்னே கைகள் கூப்பியே (ஆ)
3. நல்லறிவு நமக்கருள நயந்து பாடியே
அல்லும் பகலும் மறவாமலே அவரைப்போற்றுவோம் ()
4. பெற்றோர் பெரியோர் சொற்கள் கேட்டுப் பணிவாய்
[நடப்போமே
கற்றுக்கொடுக்கும் குருவைச் சதா கருத்தில் வைப்போமே

---

# ராஜ வாழ்த்து

## I

'இங்கிலீஷ் நோட்' மெட்டு

1. மன்னன் வாழ்கவே ஜார்ஜ் மன்னன் வாழ்கவே
இங்கிலத்தில் இன்னலின்றி இனிதாய் வாழ்கவே.

2. அன்னை மேரியும் அவர் அருமை மக்களும்
எந்நாளுமே இன்பங்களை ஏற்று வாழ்கவே.

3. இந்தியாவையும் மற்றும் இதர நாட்டையும்
சந்தோஷமாய்ச் செங்கோல் மிகச் செலுத்தி வாழ்கவே.

---

## II

'நான்முகன் நாவில் வசிக்கும் நாயகி ஸரஸ்வதி' என்ற மெட்டு.

1 ராஜ ராஜ ராஜ ராஜ ராஜ ராஜன் வாழ்கவே.
ராஜ ராஜ ராஜ ராஜ ராஜ ராஜன் வாழ்கவே—ராஜ

2 எங்கள் ஐந்தாம் ஜார்ஜ் மன்னன் இந்தியாவை ஆளவே
மங்களம் பெருகியவர் மகிமையுடன் வாழ்கவே—ராஜ

3 அன்னை மேரி ராணியாரும் அவருடைய மக்களும்
இன்னலொன்றும் இல்லாமலே இப்புவியில் வாழ்கவே-ராஜ

4 ஆங்கில அரசாட்சியில் அகிலமெல்லாம் கீர்த்தியாம்
செங்கோல் செலுத்தி நம்மைச் சீருடனே ஆளவே-ராஜ

---

# பாலர்களின் சன்மார்க்கப் பாட்டுகள்

'நாத பிந்து' என்ற மெட்டு

1. ஆதியந்த மில்லாத மாதேவனின்
பாதம் பணிந்து போற்று வோம் அனுதினம்
யாது துன்பமும் வராமலேயவர்—
அருள் பெறவே,

2. முன்னாள் நாம் செய்த புண்ணிய பாவம்போல்
இந்நாள் அநுபவம் ஏற்படு மாதலால்
என்னவானாலும் இன்னலென் றெண்ணாமல்—
ஏற்று மகிழ்வோமே.

3. பெற்றோர் பெரியோர்கள் பகர்ந்திடும் மொழிகளை
உற்றுக்கேட்டு நாம் உணர்வுடன் நடப்போமே
குற்றம் யாதொன்றும் புரியாமலே உயர்—
குணம் கைக்கொள் வோமே.

---

'ஆதி மூலமான விக்னேச்வரா நமோ' என்ற மெட்டு.

1. ஆதியந்தமில்லா ஈசன் அருளைப் பெற்றிடப்
பாதங்களைப் பூஜித்து நாம் போற்றுவோம் தினம் (ஆ)
2. பாலர் நாமெல்லோரும்கூடிப் பக்தி பண்ணுவோம்
காலைப் பாடம் துவக்கும்முன்னே கைகள் கூப்பியே (ஆ)
3. நல்லறிவு நமக்கருள நயந்து பாடியே
அல்லும் பகலும் மறவாமலே அவரைப்போற்றுவோம் ()
4. பெற்றோர் பெரியோர் சொற்கள் கேட்டுப் பணிவாய்
[நடப்போமே
கற்றுக்கொடுக்கும் குருவைச் சதா கருத்தில் வைப்போமே

---

# கதைகளும் பாட்டுகளும்

## இரண்டாம் பாகம்

### 1. புருவும் எறும்பும்

ஒரு புன்னை மரத்தின்மேல் ஒரு புரு உட்கார்ந்து இருந்தது. அம்மரத்தடியில், ஒரு சிறிய ஓடையில், தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. ஓடைக் கரையில், கட்டெறும்புகள் வரிசையாய்ப் போய்க்கொண்டிருந்தன. திடீரென்று காற்று வீசி அடித்தது. ஒரு எறும்பு தண்ணீரில் விழுந்து விட்டது.

2. அச்சமயத்தில் அந்தப் புரு, "குடுகுடு, குடுகுடு" என்று சத்தம் போட்டுப் பாடினது. அந்த எறும்பு, அந்தச் சத்தத்தைக் கேட்டு, மேலே பார்த்தது. உடனே அது, "ஏ, அழகான புருவே, எனக்கு ஒரு குச்சி ஒடித்துப்போடு" என்றது. புரு அப்படியே செய்தது. எறும்பு அந்தக் குச்சியின் மேல் ஏறிக் கரை வந்து சேர்ந்தது.


1
2
3
4
5
6

3. பின் ஒரு காலத்தில், அந்தப் புரு, அதே மரத்தில் உட்கார்ந்து, தூங்கிக் கொண்டிருந்தது. ஒரு வேடன் அங்கே வந்து, தன் அம்பால், அதைக் கொல்லப் பார்த்தான். அந்த எறும்பு அதைக் கவனித்து, அவன் குறி வைக்கும் சமயத்தில், அவன் கால் விரலில் சுள் ளென்று கடித்தது. வேடன் "அடே, அப்பா" என்று சத்தமிட்டு, வில்லைக் கீழே போட்டுக் கீழே குனிந்து பார்த்தான். எறும்பு புல்லில் ஒளிந்து கொண்டது. அவன் சத்தத்தைக் கேட்டுப், புரு விழித்துக்கொண்டு பறந்து போய்விட்டது.

4. ஆகையால் உபகாரம் வீண் போகாது.

பாட்டு

'கிளிக்கண்ணி' மெட்டு

1. புன்னை மரத்தின் மேலே
புரு ஒன்றிருக்கும் போது
சின்னக் கட்டெறும்புகள்—வரிசையாய்ச்
சிற்றோடைக் கரையில் போக

2. காற்று வீசி அடிக்கக்
கட்டெறும்பு ஒன்று தான்
தண்ணீரில் விழுந்திடவே—எறும்புக்கு
எண்ணம் பல வானதாம்.

3. அச்சமயத்தில் புரு
அழகாகப் பாடிடவே
இச்செய்தி தெரிந்தெறும்பு—தனக்குயிர்ப்
பிச்சை கொடுக்க வேண்டும்

4. என்றதைக் கேட்கும்போது
என்னவென்று புரு கேட்கக்
கண்ணீர்விடும் எறும்போர்—குச்சியைத்
தண்ணீரில் போடச் சொல்ல

5. அப்படியே செய்ததாம்
அழகான அந்தப் புரு
தப்பாமல் குச்சி ஏறி—எறும்பு
தரைக்கு வந்து சேர்ந்ததாம்.

6. பின்னொரு காலத்திலே
புன்னை மரத்தின் மேலே
சின்னப் புருவிருந்து—தூங்குகையில்
பின்னேயோர் வேடன் வந்து

7. வில்லெடுத்துப் புருவை
வீழ்த்திடக் குறி பார்த்தான்
புல்லில் ஊரும் எறும்பு—விரலில்
சுள்ளென்று கடித்திட்டதாம்.

8. வேடன் குறி தப்பிற்று
வெண் புரு உயிர் தப்பிற்று

ஒருவர்க்கு உதவி செய்தால்—நமக்கும்
ஓடியே நன்மை வரும்.

கிண்டர்கார்ட்டன் தொழில்கள்:—

(1) சித்திரம்—எறும்பு, புறா, மரம், வில், அம்பு, மனிதன் (Skeleton drawing)
(2) விதை வைத்தல்—புறா, எறும்பு, வில், அம்பு.
(3) குச்சி வைத்தல்—வில், அம்பு.
(4) களி மண் வேலை—புறா.

---

## 2. ஆமையும் முயலும்

ஒரு காட்டில் ஒரு முயல் இருந்தது. அது தன்னைப்போல், வேறு ஒருவரும் வேகமாய் ஓடமுடியாது என்று, கர்வம் அடைந்து இருந்தது. ஒரு நாள் அது ஒரு ஆமையைக் கண்டு, அதைத் தன்னுடன் பந்தயத்தில் ஓட அழைத்தது. ஆமை அதற்கு ஒப்புக்கொண்டது. தூரத்திலுள்ள ஒரு சாலையில் ஒரு மைல் கல் இருந்தது. அந்தக் கல்லைத் தொடவேண்டும் என்று பேசிக் கொண்டு, இரண்டும் ஓரிடத்திலிருந்து புறப்பட்டன.

2. முயல் வெகு தூரம் ஆமைக்கு முன் போய், பின்னே திரும்பிப் பார்த்தது. ஆமை வெகு தூரத்துக்குப் பின்னல் வருவதைக் கண்


1
2
3
1
4
1
5
6

டது. அது தன்னிடம் வருவதற்குள், தான் கொஞ்ச நேரம் இளைப்பாறலாம் என்று எண்ணி, சாலையோரத்தில் போய்ப் படுத்தது. அது நன்றாய்த் தூங்கிவிட்டது.

3. ஆமை மெள்ள மெள்ள வந்து, முயலைத் தாண்டி, மைல் கல்லின் அருகில் போய் விட்டது. முயல் விழித்துக் கொண்டு இதைப் பார்த்தது. உடனே அது ஒரே ஓட்டமாய் ஓடிப் பார்த்தது. ஆமை அதற்கு முந்தியே மைல் கல்லைத் தொட்டுவிட்டது. அதுமுதல் முயல் கர்வத்தை விட்டது.

4. ஆகையால் நாம் கர்வம் அடையக் கூடாது.

பாட்டு

'சாலையிலே இரண்டு மரம்' என்ற தெம்மாங்கு மெட்டு.

1. கர்வம் மிகவே கொண்ட
காட்டு முயல் கூட ஒரு
மந்தமான ஆமையொன்று
பந்தயத்தில் ஓடுவதாய்— [வாம்
ஒப்புக்கொண்டு இருபிராணியும் புறப்பட்ட
குறித்தவிடம் போய்ச் சேரப் புறப்பட்ட
[வாம்.

2. ஒரு நொடியில் வெகு தூரம்
ஓடி முயல் பின்னே பார்க்க

வரும் ஆமை தூரத்திலே
வருவதைப் பார்த்து அது—
சற்று நேரம் இளைப்பாறச் சாலை யோரம்
போய்ப் படுத்துத் தூங்கினதாம் வெகு
[நேரம்.

3. மெள்ள மெள்ளப் போயாமை
மைல் கல்லின் கிட்டத்திலே
தள்ளித் தள்ளி ஆமை போகும்
தருணத்திலே விழித்து முயல்—
ஓட்டமாக ஓடிப்பார்த்தும் முடியவில்லை
காட்டுமுயல் கர்வம் பின்னால் காட்டவில்லை.

4. என்ன காரியம் செய்தாலும்
ஏமாந்து போகாமலே
சின்னப்பிள்ளாய் சொன்னேன் கேள்
சீக்கிரமாய்ச் செய்து முடி—
பெருமையைப் பேசி வீணில் திரியாதே
உறுதியை விட்டுவீணாய் அலையாதே.

வேறு மாதிரி

'சித்தி விநாயகா' என்ற மெட்டு.

1. கர்வத்துடன் ஒரு
காட்டு முயல் சொற்கேட்டுப்
பந்தய ஓட்டத்துக்கு
மந்த ஆமை வந்ததாம்.

2. மைல் கல்லைத் தொட்டிட
மந்த ஆமை குறிப்பிட
முயல் வெகு வேகமாய்
ரயில் போல ஓடிற்றும்.

3. சாலை வழி மத்தியில்
சற்று இளைப் பாறவே
வீரம் பேசின முயல்
ஓரமாகத் தூங்கிற்றும்.

4. மெள்ள மெள்ளப் போய் ஆமை
மைல் கல்லைத் தொட்டிடக்
குள்ள முயல் விழித்துக்
குதித்தோடியும் பயனில்லை.

5. ஆகையால் பெருமையாய்
ஆரிடமும் பேசாதே
வேகமாய் விடாமலே
ஆகும் காரியத்தைச் செய்.

**கிண்டர்கார்ட்டன் தொழில்கள் :—**

(1) சித்திரம்—சாலை, மைல்கல், ஆமை, முயல்.
(2) களிமண் வேலை—ஆமை, முயல்,
(3) **விதை வைத்தல்—ஆமை, முயல்.**

## 3. ஓநாயும் ஆட்டுக்குட்டியும்

ஒரு ஆற்றங்கரையில் ஒரு ஆட்டுக்குட்டி தண்ணீர் குடிக்க வந்தது. அப்பொழுது அதற்கு எதிரில், மேடான இடத்தில், ஒரு ஓநாய் தண்ணீர் குடிக்க வந்தது. அது அந்த ஆட்டுக்குட்டியைப் பார்த்ததும், அதைப் பிடித்துத் தின்னவேண்டும் என்று எண்ணங்கொண்டது.

2. உடனே அது, ஆட்டுக்குட்டியைப்பார்த்து, "யாரடா, முன்னால் நின்று தண்ணீரைக் கலக்குகிறவன்?" என்று சொன்னது. அதற்கு அந்த ஆட்டுக்குட்டி "ஓநாயே, நான் ஒன்றும் அறியேன். உனக்கேது என்மேல் கோபம். உன்னைத் தாண்டித்தானே, தண்ணீர் என்னிடம் வருகிறது" என்றது.

3. ஓநாய், "அது போனால் போகட்டும். போன வருஷத்தில் நீ என்னையும் என் இனத்தாரையும் வைதாயல்லவா?" என்றது. ஆட்டுக்குட்டி, "நான் பிறந்தே நாலு மாதந்தான் ஆகிறது. போன வருஷத்தில் நான் எப்படி வைதிருக்க முடியும்" என்று சொன்னது.

4. ஓநாய் "நீ வையாவிட்டால், உன் அப்பன் வைதிருப்பான். உன் பாட்டன் வைதிருப்பான். உன் முப்பாட்டன் வைதிருப்பான்.

என்னவாலுைம் சரி. நான் உன்னை விடமாட்டேன். இப்பொழுதே உன்னைத் தின்றுவிடுகிறேன்,'' என்று சொல்லி, அதன் மேல் பாய்ந்து, அதைக் கொன்று தின்று விட்டது.

5. ஆகையால், துஷ்டரைக் கண்டால் தூரவிலகு.

பாட்டு

'இங்கிலீஷ் நோட்டு' மெட்டு

ஆற்றோரத்திலே ஆட்டுக்குட்டி யொன்று
அதிக தாகமாய் ஆற்று நீர் குடிக்கையில்
ஓநாய் ஒன்றங்கே ஓடியே வந்திட
உடல் பதறி ஆடு ஒடுங்கியே நின்றிட

ஓநாய் ஆட்டுக்குட்டியைப் பார்த்து

'ஜில்பகோ' என்ற இந்துஸ்தானி மெட்டு.

யாரடா முன்னே நின்று தண்ணீரைக் கலக்கு [கிறாய்
கூறடா என்னிடத்தில் உன்றன் சாமர்த்தியத்தை
அற்பப்பயலே, மூடப்பயலே, மடப்பயலே— [யாரடா

ஆட்டுக்குட்டி ஓநாயைப் பார்த்து

'ஓரடி வைத்து மற்றோரடி வைக்கையில்' என்ற மெட்டு.

(சதாரம் சரித்திரம்)

ஓநாயே நான் ஒன்று மறியேனே
உனக்கிந்த வேளையில் ஏனிந்தக் கோபம்
உன்னைத் தாண்டியே தண்ணீர்
என்னிடம் வருகிறது


2
3

வீண் பழி சொல்லாதே-ஏ-ஏ, ஐயோ
ஏழைமேல் இரக்கம் வைப்பாய்.

'ஓநாய்' முன் மெட்டு.

போன வருஷத்திலே பலவிதமாய் வைதாயேடா
ஆனபோதும் பொறுத்தேன் அஞ்சாமல் இப்
[போது
நெஞ்சுத் துணிவாய், மிஞ்சிமிஞ்சியே, கண்ட
[படி
பேசுகிறாய், தண்டனை கொடுக்கிறேன் பார்.

'ஆட்டுக்குட்டி' முன் மெட்டு.

நானோ பிறந்து நாலு மாதமாச்சு
போன வருஷத்திலே வைதது நிஜமாமோ
ஏனோ நீ என் மேல் ஏற்காத பழிகளை
இப்படிச் சொல்லுகிறா-ஆ-ஆய் ஐயோ
ஏழைமேல் இரக்கம் வைப்பாய்.

'ஓநாய்' முன் மெட்டு.

உன்னுடைய அப்பன் பாட்டன்
முப்பாட்டன் முதலியோர்கள்
என்னையும் இனத்தாரையும்
இழிவாகவே பேசினதால்
என்னவானாலும், உன்னை
விடேனே, இக்ஷணமே
உன்னைக் கொன்று, பக்ஷிக்கிறேன்
பாரடா நீ.

## முடிவு.

‘முத்திநெறி அறியாத’ என்ற மெட்டு.

1. என்று சொல்லி அந்த ஓநாய்
ஏழை ஆட்டுக் குட்டிதனைக்
கொன்று தின்று போய்விட்டதாம்
கொஞ்சமும் இரங்காமல்

2. துஷ்டரைக் கண்டவுடன்
தூரத்திலே போய்விடுவீர்
கஷ்டத்தில் அகப்படாமல்
கருத்தாக வாழ்ந்திடுவீர்.

கிண்டர்கார்ட்டன் தொழில்கள் :—

(1) சித்திரம்—ஆட்டுக்குட்டி, ஓநாய்.
(2) மணல் விளையாட்டு—ஆற்றங் கரை.
(3) களிமண் வேலை—ஆட்டுக்குட்டி, ஓநாய்.

---

## 4. வயிறும் அவயவங்களும்

ஒரு காலத்தில், ஒருவன் உடம்பிலுள்ள அவயவங்கள் எல்லாம் ஒன்றுகூடி, “ஏன், நாம் மட்டும் வேலை செய்ய வேண்டும். இந்தக் கடம் போல்உள்ள வயிறு மட்டும் சும்மா இருக்கிறதே. நாம் தேடிக்கொடுத்ததை எல்லாம் வாங்கிக் கொண்டு, சௌக்கியமாயிருக்கிறதே. இனி நாம் ஒருவரும் வேலை செய்யவேண்டியதில்லை. இந்த

வயிறு என்ன செய்கிறது பார்ப்போம்'' என்று சொல்லிக்கொண்டு, ஒரு வேலையும் செய்யாமல், சும்மா இருந்தன.

2. இரண்டொரு நாட்கள் செல்லவே, ஒவ்வோர் அங்கமும் தளர்வடைந்தது. உடனே அவைகள், "ஆஹா, நாம் நினைத்தது முட்டாள் தனம். இந்த வயிற்றினுல் அல்லவா நமக்குப் பலம் வருகிறது. நாம் வேலை செய்ய வேண்டியதுதான். வயிறு சும்மா இருக்க வேண்டியதுதான்'' என்று சொல்லிக்கொண்டு, மறுபடி முன்போல், சுறு சுறுப்பாய் வேலை செய்ய ஆரம்பித்தன. சீக்கிரத்தில் அவைகளுக்கு, மறுபடி பலம் வந்து விட்டது.

3. ஆகையால், அவரவர் வேலையை அவரவரே செய்யவேண்டும்.

### பாட்டு

'வாரும் ஐயா நலுங்கிடவே' என்ற மெட்டு.

1. உடம்பில் உள்ள உறுப்புக்களில்
கடம் போல் உள்ள வயிறு மட்டும்
ஒரு வேலையும் செய்யாமல்
உல்லாசமாய் இருக்கக் கண்டு

2. மற்ற உறுப்புக்கள் சகியாமல்
குற்றம் அதன்மேல் சுமத்திக்கொண்டு


1
2
3
4

ஒரு வேலையும் செய்யாமல்
இறுமாப்புடனே இருந்தனவாம்.

3. ஒரு நாள் இருநாள் கழிந்திடவே
ஒவ்வோர் அங்கமும் தளர்வடைய
மறுபடி முன்போல் வேலை செய்யச்
சுறுசுறுப்புடனே தொடங்கினதாம்

4. அவரவர் வேலையை அவரவரே
அவனிதனில் செய்ய வேண்டும்
கற்ற நீதியை மறவாமல்
முற்றும் மனத்தில் வைத்திடுவோம்.

வேறு மாதிரி.

'சரண கமலாலயத்தில்' என்ற மெட்டு.

1. உடம்பிலுள்ள உறுப்புக்களில்
கடம்போல் உள்ள வயிறுமட்டும்
ஒருவேலை செய்யாமலே—இருந்திட
மற்ற உறுப்புக்கள் எல்லாம்
குற்றம் அதன்மேல் சுமத்தி
அசைவில்லாமல் ஓரிடத்தில்—அமர்ந்திட

2. ஒன்றிரண்டு நாள் செல்லவே
ஒவ்வோர் அங்கம் தளர்வடைய
மறுபடி முன்போல் வேலை—செய்திடச்

சுறுசுறுப்பாய்த் தொடங்கித்
துருசாக வேலை செய்ய
ஒரு நொடியில் பழைய பலம்—வந்ததாம்

3. அவரவர் வேலைகளை
அவரவரே தான் செய்து
அவனிதனிலே வாழ்ந்து—வரவேண்டும்
என்னும் நீதியை மனத்தில்
எப்போதுமே வைத்திருத்தால்
இன்னலொன்றும் வந்திடாது—இகத்
[திலே.

**இண்டர்கார்ட்டன் தொழில்கள் :—**

சித்திரம்—மனித உடல், (தனித்தனிப் பாகங்கள்).
முழுவுடல் (Skeleton drawing)

களிமண் வேலை-மனித உடல் (தனித்தனிப் பாகங்கள்),
ஷை முழு உருவம்.

---

## 5. நாணலும் தென்னையும்

ஒரு ஆற்றங்கரையில் பல நாணல்கள் அடர்த்தியாய் வளர்ந்திருந்தன. அவை யருகில் பல தென்னை மரங்களும் வளர்ந்து இருந்தன. ஒரு தென்னை ஒரு நாணலைப் பார்த்து, "ஏ, நாணலே, நீ என்னைப்போல் உயரமாய் வளர்வாயா? உனக்கு என்னைப்போல் பலமுண்டா?" என்று கேலியாகப் பேசினது. நாணல் அதைப் பார்த்து,

"ஏ, தென்னையே, வீணாகக் கர்வம் அடையாதே. ஒரு புயல்-காற்று வந்தால், உன் கதி அதோகதி தான்'' என்றது.

2. கொஞ்ச நேரத்திற்கெல்லாம், திடீ ரென்று புயல்-காற்று அடித்தது. அந்தத் தென்னை வேரறுந்து தொப்பெனக் கீழே விழுந் தது. நாணல் கொஞ்ச நேரம், காற்றில் அசைந் தாடிக், காற்று நின்றவுடன், மறுபடி முன் போலத் தலை நிமிர்ந்து நின்றது. அப்பொழுது அது, தென்னையைப் பார்த்துத், "தென்னையே, முன்னம் ஏதேதோ பேசினாயே, என்னைப்போல் எழுந்து நில் பார்ப்போம்'' என்றது. தென்னை நாணலைப் பார்த்து, " நாணலே, நான் உன்னை அறியாமல் கேலி செய்தேன். தொப்பெனக் கீழே விழுந்து விட்டேன். என் தப்பிதத்தை மன்னிக்க வேண்டும்,'' என்றது. நாணல் அதைப் பார்த்து, "ஐயோ தென்னையே, அநி யாயமாய்க் கீழே விழுந்து விட்டாயே. நீ கர்வம் அடைந்ததால்தான், உனக்கு இந்தக் கதி வந் தது'' என்றது. பிறகு தென்னைக்கு உடையவன் வந்து, அதை வெட்டித் தன் வீட்டுக்குக் கொண்டு போனான்.

3. ஆகையால், பெருமை பேசினோர் சிறு மை அடைவர்.


1
2
3

## பாட்டு

'ஆண்டிப் பண்டாரம்' என்ற மெட்டு

தென்னை நாணலைப் பார்த்து

அற்ப நாணலே நீ என்
ஆற்றங் கரையில்
சாய்ந்தாடிச் சாய்ந்தாடிச்
சொகுசாக மறுபடியும்
தரையோடு தரையாகவே
கரையிலே இருக்கிறாயே—அற்ப

நாணல் தென்னையைப் பார்த்து

தென்னை மரமே நீ என்
என்னை வீணாகப்
பரிகாசம் பண்ணுகிறாய்
அறிவாயே பின்னால் புயற்
காற்று அடித்தால் அதன்
கூத்தை நீ கண்டிடுவாய்.

நாணல் கீழே விழுந்த தென்னையைப் பார்த்து

தென்னை மரமே முன்னால்
என்னென்னவோ நீ
பெருமையாய்ப் பேசினாயே
வருவதை அறியாமலே
என்னைப்போல் எழுந்து நிற்பாய்
தென்னையே நான் பார்க்கவே.

தென்னை நாணலைப் பார்த்து

அறிவில்லாமலே உன்னைப்
பரிகாசம் செய்தேன்
உயரமாய் வளர்ந்தேன் என்று
உன்னை நான் இகழ்ந்தேனே
தொப்பென்று விழுந்தேனே
தப்பிதம் மன்னிப் பாயே—அறி

நாணல் தென்னையைப் பார்த்து

ஐயோ தென்னை மரமே நீ
அநியாய மாக
வேரோடு பெயர்ந்து ஆற்றின்
ஓரத்தில் விழுந்து விட்டாய்
பெருமையாய்ப் பேசினதால்
சிறுமையை அடைந்தாயே நீ—ஐயோ.

கிண்டர்கார்ட்டன் தொழில்கள் :—

(1) சித்திரம்—நாணல், தென்னை மரம், இளநீர், உரித்த தேங்காய், தேங்காய் மூடி, கோடரி, மனிதன் (Skeleton drawing).

(2) விதை வைத்தல்—தென்னை மரம், தேங்காய், கோடரி.

(3) களிமண் வேலை-தேங்காய், தேங்காய்மூடி, இளநீர்

(4) குச்சி வைத்தல்—கோடரி.

## 6. நரியும் திராக்ஷையும்

ஒரு காலத்தில் ஒரு நரி, இரையைத் தேடிக் காடெல்லாம் அலைந்து திரிந்தது. அதற்கு ஒன்றும் அகப்படவில்லை. கடைசியாய், ஒரு திராக்ஷைக் கொடியைக் கண்டது. அதில் அழகான திராக்ஷைப் பழக் கொத்துக்கள் தொங்கிக் கொண்டிருந்தன.

2. நரி அதைப் பார்த்ததும், மிகவும் சந்தோஷம் அடைந்தது. உடனே அது, அந்தத் திராக்ஷைக் கொடியண்டை, குதித்து ஓடினது. திராக்ஷைப் பழக் கொத்துக்கள் உயரத்தில் இருந்தன. அதனால் அவை, அதற்கு எட்டவில்லை. நரி தன்னால் ஆனமட்டும், குதித்துக் குதித்து அவைகளை எட்டப் பார்த்தது. அதனால் அவைகளை எட்ட முடியவில்லை.

3. பிறகு அது, தனக்குள், "சீச்சீ, இந்தப் பழம் புளிக்கும். இது எனக்கு வேண்டாம்" என்று பெருமையாகப் பேசிக்கொண்டு போய் விட்டது.

4. ஆகையால், வீண் பெருமை பேசக் கூடாது. நம்மால் செய்ய முடியாத காரியத்தில் தலையிடக் கூடாது.


2
3
4

## பாட்டு

‘ வாரும் எந்தன் பிராண நாதா ’ என்ற நோட்டு மெட்டு

1. தந்திரமுள்ளவோர் நரி பசித்
தொந்தரவாலே காடெங்கும்
அலைந்து வாடியே, மெலிந்த உடலுடன்
அழகு பொருந்திய திராக்ஷைக்கொத்தை

2. கண்டு மனம் களித்து மிகவும்
கொண்டாட்டமாய்க் குதி குதித்து
எட்டப் பார்த்ததாம், மட்டி நரியும்
திட்டமாயது எட்டவில்லை.

3. என்றறிந்து ஏமாந்த நரி
ஒன்றும் தோன்ருமல் பெருமையாகச்
சீச்சீ இந்தப் பழம் புளித்திடும்
சீக்கிரம் நான் சென்றிடுவேன்.

4. என்று சொல்லிப் போனதைப்போல்
ஒன்றும் நீங்கள் செய்திடாதீர்
எட்டாக் காரியத்தில் கொட்டாவி விட்டு
முட்டாள் தனத்திலே மூழுகாதீர்.

கிண்டர்கார்ட்டன் தொழில்கள் :—

(1) சித்திரம்—நரி, திராக்ஷை.
(2) களிமண் வேலை—நரி, திராக்ஷை.

## 7. மெய்யனும் பொய்யனும்

சுப்பன், இராமன் என்ற இரண்டு சகோதரர்கள், தங்கள் வீட்டுத்தென்னந்தோட்டத்தில், கால்பந்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தாயார், அங்கே ஒரு செம்பில், பாலை வைத்துவிட்டு, வீட்டிற்குள் போயிருந்தாள். இராமன் பந்தடிக்கும்போது, பந்து துள்ளி உருண்டு வந்து அந்தச் செம்பைக் கவிழ்த்து விட்டது. செம்பும் உடைந்து, அதில் உள்ள பாலும் கொட்டிவிட்டது.

2. பிறகு அவர்கள் தாயார், அங்கேவந்து, அதைப் பார்த்து, "யாரடா பாலைக்கொட்டினவன்? உள்ளதைச் சொல்லுங்கள்" என்று தன் பிள்ளைகளிடம் கேட்டாள். இராமன் தனக்கொன்றும் தெரியாது என்று பொய் சொன்னான். சுப்பன் நடந்ததைச் சொன்னான். அவர்கள் தகப்பனார் மறைவாயிருந்து, இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தார்.

3. இராமன் அவ்விடத்தைவிட்டு, ஒரு தென்னை மரத்தடியில், காற்றாடியைப் பறக்கவிட்டுக்கொண்டிருந்தான். அந்தச் சமயம் பார்த்து, தகப்பனார்கையில்ஒருபிரம்பை எடுத்துக்கொண்டு இராமனிடம்ஓடிவந்து, அவனை நன்றாய் அடித்

தார். பிறகு அவர், சுப்பனுக்கு நல்ல தின்பண்டம் கொடுத்தார். சுப்பன் தகப்பனிடம் "அப்பா, அப்பா, இராமனை அடிக்காதேயுங்கள். அவன் இனிப் பொய் சொல்ல மாட்டான்", என்று சொல்லி, இராமனுக்காகச் சிபார்சு செய்தான். இராமனும் தகப்பனிடம், "அப்பா, அப்பா, என்னை அடிக்காதேயுங்கள். நான் இனிமேல், ஒருபோதும் பொய் சொல்ல மாட்டேன்" என்று அழுதுகொண்டே சொன்னான். அது முதல், அவன் எப்பொழுதும், உண்மையே பேசி வந்தான்.

4. ஆகையால், நாம் எப்பொழுதும் உண்மையே பேசவேண்டும்.

பாட்டு

'அன்னம் உண்ணுமலே' என்ற மெட்டு
(கோவலன் சரித்திரம்)

தாய் பிள்ளைகளைப் பார்த்து

யாரடா பாலைக், கொட்டினவன்
செப்புவீர்
கூறடா, உள்ளதைக்
கொஞ்சமும், ஒளியாமல்—யாரடா

இராமன் தாயைப் பார்த்து

என்றன் அம்மாவே, எனக்கொன்றும்
தெரியாது


1
2
3
4
5
6

உன்றன் முன், உள்ளதை,
உள்ளபடி, சொல்கிறேன்—என்றன்

சுப்பன் தாயைப் பார்த்து

பந்தடிக்கையில், பாலை இராமன்
கொட்டினன்
இந்தப் பொய், சொல்லியே,
ஏமாற்றப் பார்க்கிருன்—பந்த

தகப்பன் இராமனைப் பார்த்து

துஷ்டப் பயலே, துணிவாகப்
பொய் சொன்னய்
இஷ்டம்போல், உன்னை நான்,
இப்போதே அடிக்கிறேன்—துஷ்ட

தகப்பன் சுப்பனைப் பார்த்து

சுப்பா இங்கே வா, சுவையுள்ள
தின்பண்டம்
இப்போதே, வாங்கிக்கொள்,
எப்போதும் மெய்பேசு—சுப்பா

சுப்பன் தகப்பனைப் பார்த்து

அப்பா வந்தனம், அடியாதீர் இராமனை
எப்போதும், இனியவன்,
செப்புவான் உண்மையை—அப்பா

இராமன் தகப்பனைப் பார்த்து

அப்பா நான் இனி, அரை
நொடியும் பொய் சொல்லேன்
எப்போதும், உண்மையே,
செப்புவேன் நிஜமிது—அப்பா

வேறு மாதிரி
'கொண்டவனை விட்டு' என்றமெட்டு (சத்யவான் சாவித்ரி)

(தாய், தகப்பன் சொல்வதை உயர்த்தியும், பிள்ளைகள் சொல்வதைத் தாழ்த்தியும் சொல்க)

தாய் பிள்ளைகளைப் பார்த்து

யாரடா பால் செம்பைக் கொட்டினவன் இங்கே
கூறடா உள்ளதை ஒளியாமலே.

இராமன் தாயைப் பார்த்து

ஐயோ என் அம்மாவே அறியேனே ஒன்றையும்
மெய்யாகச் சொல்கிறேன் கேட்பாயே நீ

தாய் சுப்பனைப் பார்த்து

சுப்பனே இங்கேவா எப்போதும் போலவே
செப்புவாய் உண்மையைச் சீக்கிரமாய்

சுப்பன் தாயைப் பார்த்து

பந்தடிக்கும் போது இராமனே கொட்டினான்
என்றன் அம்மாவே கேள் இதுவே நிஜம்

தகப்பன் இராமனைப் பார்த்து

துஷ்டப்பயலே நீ துணிவாகப்பொய்சொன்னாய்
இஷ்டம்போல் உன்னை நான் சிக்ஷிக்கிறேன்

இராமன் தகப்பனைப் பார்த்து

அப்பாவே நான் இனிப்பொய்சொல்லவே மாட்
செப்புவேன் எப்போதும் உள்ளதையே [டேன்

தகப்பன் சுப்பனைப் பார்த்து

சுப்பனே உனக்கு நான் சுவையுள்ள தின்பண்டம்
இப்போதே தருகிறேன் இங்கே வாடா

சுப்பன் தகப்பனைப் பார்த்து

அப்பாவே வந்தனம் அடியாதீர் இராமனை
செப்புவான் இனியவன் உள்ளதையே.

கிண்டர்கார்ட்டன் தொழில்கள் :—

(1) சித்திரம்—கால்பந்து, செம்பு, தென்னைமரம், பையன் (Skeleton drawing)
(2) விதைவைத்தல்-கால்பந்து, செம்பு, தென்னைமரம்
(3) களிமண் வேலை—செம்பு, கால்பந்து, மாம்பழம்.

---

## 8. நோயாளியும் பிள்ளைகளும்

ஒரு ஊரில் ஒரு மனிதன் வெகு நாளாய் வியாதியால் அவஸ்தைப்பட்டான். தனக்கு இனிப் பிழைப்பில்லை என்று அறிந்துகொண்டு, அவன் தன்னுடைய மூன்று பிள்ளைகளையும், தன் அருகில் அழைத்தான். பிள்ளைகள் அவன் அரு


1
2
3
4
5

கில் வந்து, "தந்தையே, இதோ வந்தோம். நாங்கள் என்ன செய்ய வேண்டும்" என்று கேட்டார்கள்.

2. அவன் அவர்களைப் பார்த்து, "என் அருமைக் குழந்தைகளே, நான் இனிப் பிழைக்க மாட்டேன். நீங்கள் ஒற்றுமையாய் வாழ்ந்து வர, உங்களுக்கு ஒரு உதாரணம் காட்டுகிறேன். ஒரு சுள்ளிக் கட்டை இங்கே கொண்டு வந்து, அதை அப்படியே ஒடித்துப் பாருங்கள்" என்ருன். பிள்ளைகள் அப்படியே செய்தார்கள். அவர்களால் அதை ஒடிக்க முடியவில்லை. பிறகு அவன், அந்தக் கட்டை அவிழ்த்து, ஒவ்வொன்ருய் ஒடிக்கச் சொன்ஞன். அவர்கள் ஒரு நொடியில், இலகுவாய்ச் சுள்ளிகளை ஒடித்துவிட்டார்கள்.

3. அப்பொழுது அவன், பிள்ளைகளைப் பார்த்து, "குழந்தைகளே, பார்த்தீர்களா? இதைப்போல் நீங்கள் ஒற்றுமையாய் வாழ்ந்தால், உங்களை ஒருவராலும் வெல்ல முடியாது. ஆகையால் நீங்கள், எப்பொழுதும் ஒற்றுமையாக இருக்க வேண்டும்" என்று சொன்ஞன். பிள்ளைகள் அப்படியே இருப்பதாகத், தந்தையிடம் வாக்களித்தார்கள். கொஞ்ச நேரத்துக்கெல்லாம், அம்மனிதன் இறந்துபோஞன்.

அன்று முதல், அந்தப் பிள்ளைகள் எப்பொதும் ஒற்றுமையாகவே வாழ்ந்து வந்தார்கள்.

4. ஆகையால், நாம் ஒற்றுமையாய் வாழ வேண்டும்.

பாட்டு

'ஆரண்யத்தில் ஓரரசன்' என்ற மெட்டு

தகப்பன் பிள்ளைகளைப் பார்த்து

அருமையான பிள்ளைகளே
அருகில் வாருங்கள்
ஒரு நொடியும் உயிர் தரியேன்
உங்களுக்கு நான்
ஒற்றுமையாய் வாழ்ந்து வர
ஓர் வழியை நான்
கற்றுக்கொடுக்கிறேன் என்றன்
கவலை நீங்கவே—அருமை

பிள்ளைகள் தகப்பனைப் பார்த்து

தந்தையாரே தாழ்மையுடன்
வந்தோம் உம்மிடம்
என்ன நாங்கள் செய்யவேண்டும்
இயம்பிடுவீரே—தந்தை

தந்தை பிள்ளைகளைப் பார்த்து

சுள்ளிக்கட்டு ஒன்றை இங்கே
சுமந்து வாருங்கள்

ஒன்ருய் அதை அப்படியே
ஒடித்துப் பாருங்கள்—சுள்ளி

*பிள்ளைகள் தகப்பனைப் பார்த்து*

ஒடித்துப் பார்த்தோம் முடியவில்லை
உண்மையாகவே
என்ன இனிச் செய்யவேண்டும்
எங்கள் தந்தையே—ஒடித்து

*தகப்பன் பிள்ளைகளைப் பார்த்து*

ஒவ்வொன்ருகச் சுள்ளிகளை
ஒடித்துப் பாருங்கள்
உண்மையதை அறிந்திடுவீர்
ஒரு நொடியிலே—ஒவ்

*பிள்ளைகள் தகப்பனைப் பார்த்து*

ஒடித்து விட்டோம் சுள்ளிகளை
ஒரு நொடியிலே
அறிந்து கொண்டோம் உண்மையதை
அரிய தந்தையே—ஒடி

*தகப்பன் பிள்ளைகளைப் பார்த்து*

சிறுவர்களே இதைப்போல் நீங்கள்
சேர்ந்து வாழுங்கள்
ஒருவர்க்கேனும் பயமில்லாமல்
உலகில் வாழலாம்—சிறு

பிள்ளைகள் தகப்பனைப் பார்த்து

ஒற்றுமையாய் நாங்கள் இனி
உலகில் வாழ்வோமே
கற்ற நீதி மறவாமலே
கருத்தாய் இருப்போமே—ஒற்று

கிண்டர்கார்ட்டன் தொழில்கள் :—

(1) சித்திரம்—கட்டில், சுள்ளிக்கட்டு, மனிதன், பிள்ளைகள் (skeleton drawing).

(2) குச்சிவைத்தல்—கட்டில்.

(3) விதை வைத்தல்—கட்டில்.

(4) களிமண் வேலை—மனிதன், உடல் (தனித்தனிப் பாகங்கள்) ஷை முழு உருவம்.

---

## 9. மரம் சாக்ஷியான கதை

அளகாபுரி என்ற ஊரில் ஒரு சிறுவன் இருந்தான். அவனிடத்தில் ஆயிரம் ரூபாய் இருந்தது. அவன் அயல் தேசம் போய், அதிகப் பணம் சம்பாதிக்க வேண்டும் என்று எண்ணங் கொண்டான்.

2. அடுத்த வீட்டில் ஒரு கிழவன் இருந்தான். அவன் தன் வீட்டுக்கொல்லை மரத்தடியில் நின்றுகொண்டிருந்தான். அந்தப் பையன், அந்தக் கிழவனிடம்போய்த் தன்னிடமிருந்தபணத்

தைக் கொடுத்துத், தான் அயல் தேசம் போய்த் திரும்பிவரும் வரை, அதைக் காப்பாற்றித் தரும்படி, கேட்டுக்கொண்டான். கிழவன் அதற்கு ஒப்புக்கொண்டு, பணத்தை வாங்கிக்கொண்டான்.

3. பையன் அயல் தேசம் போய்த் திரும்பி வந்து, கிழவனிடம் தான் கொடுத்த பணத்தைக் கேட்டான். கிழவன், "பணமேது, கிணமேது. உனக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதா? வைத்தியரிடம் போய், நல்ல மருந்து வாங்கிச் சாப்பிடு, போ" என்றான். பையன், "ஏதையா இவ்விதம் ஒன்றும் அறியாதவர்போல் பேசுகிறீர். இது நியாயமா? நீர் பணத்தைக் கொடுக்காவிட்டால், நான் நீதி ஸ்தலத்தில் போய் முறையிட்டுக் கொள்வேன்" என்றான். கிழவன் "வீண் பொய்யான வார்த்தைகளைப் பேசாதே. உன்னுலானதைப் பார். என்னுலானதை நானும் பார்த்துக் கொள்வேன். என் முன் நில்லாதே ஓடிப்போ" என்று சொல்லிப் பையனை அதட்டினான்.

4. பையன் நீதி ஸ்தலத்தில் போய், தன் வழக்கை முறையிட்டுக்கொண்டான். நீதிபதி ஒரு சேவகனைக் கொண்டு, கிழவனை வரவழைத்தார். அவர் கிழவனைப் பார்த்துக் "கிழவனாரே, பையனிடம் பணம் வாங்கினதுண்டா?" என்று கேட்டார். கிழவன் "நான் யாதொரு பணமும் வாங்க


1
2
3
4
5

TB
031(2) N34
8870



வில்லை'' என்றான். பிறகு நீதிபதி, பையனைப் பார்த்து, "பையா, வழக்குக்கு ஏதாவது சாக்ஷி யுண்டா?'' என்று கேட்டார். பையன் "நான் கிழவன் வீட்டுக் கொல்லை மரத்தடியில், பணம் கொடுத்தேன். எனக்குச் சாக்ஷி ஒருவரும் இல்லை'' என்றான். நீதிபதி, "அப்படியானால், நீ போய், அந்த மரத்தைச் சாக்ஷி சொல்ல அழைத்து வா. நாம் அழைத்ததாய்ச் சொன்னால், அந்த மரம் தானே வரும்: போ'' என்று சொன்னார். பையன் அப்படியே போய், மரத்தை அழைத்தான். மரம் அசையாமல் இருந்தது.

5. பையன் திரும்ப வருவதற்குள், நீதிபதி கிழவனைப் பார்த்துப் "பையன் இதற்குள், மரத்தண்டை போயிருப்பானா?'' என்று கேட்டார். கிழவன் "அந்த மரம் வெகு தூரத்திலிருக்கிறது. இதற்குள் எப்படி அவன் போகமுடியும். பையன் வேகத்தைத் தாங்களே அறிவீர்கள்'' என்றான். பையன் திரும்பவந்து "எஜமானே, என்னாலானமட்டும் மரத்தை அழைத்துப் பார்த்தேன். மரம் அசையாமல் நிற்கிறது. நான் போனது போல் திரும்பவந்தேன்'' என்றான்.

6. நீதிபதி அவனை பார்த்துப், "பையா, நீ போயிருக்கும்போது, அந்தமரம் இங்கேவந்து, சாக்ஷி சொல்லிப் போய்விட்டது. பயப்படாதே'' என்று சொல்லிவிட்டுக்கிழவனைப் பார்த்து "மரம்


6
7
9
10
JAIL
ജെയിൽ
8

வெகு தூரம் என்ற வாக்குமூலம் நீ கொடுத்ததால் நீ பணம் வாங்கினது உண்மை என்று, வெட்ட வெளியாயிற்று. உடனே பணத்தைக் கொடுத்து விடு. அது போதாமல், நீ பத்து மாதச் சிறை வாசமும் செய்யவேண்டும்'' என்று தீர்ப்புச் சொன்னார். கிழவன் தன் சட்டைப் பையி லிருந்து, பணத்தை எடுத்து, நீதிபதி முன் எண்ணிவைத்தான். நீதிபதி பையனைப் பார்த்துப், "பையா, உன் உண்மையை நான் மெச்சி னேன். உன் பணத்தை எடுத்துக்கொள்'' என்றார். பையன் நீதிபதிக்கு வந்தனம் செய்து விட்டுத், தன் பணத்தை எடுத்துக்கொண்டான். கிழவன் நீதிபதியைப் பார்த்து, "எஜமானே, நான் புத்தியில்லாமல் சிறுவனை மோசம் செய்யப் பார்த்தேன். இனி நான், ஒருவரையும் மோசம் செய்யமாட்டேன்'' என்று சொல்லிப், பத்து மாதச் சிறைவாசம் பண்ணி வீட்டுக்கு வந்தான். அதுமுதல், அவன் உண்மையாகவே நடந்து வந்தான்.

7. ஆகையால், நாம் பிறரை மோசம் செய்யக் கூடாது.

பாட்டு

'பித்தா பிறை' என்ற மெட்டு

அளகாபுரி என்ற ஊரில், வளர்ந்து
வந்த சிறுவன்

அயல் தேசம் போய்ப் பணம் தேடவே
ஆசை மிகக்கொண்டு
அடுத்த வீட்டுக் கிழவனிடம்,
அவனிடத்திலிருந்த
ஆயிரம் ரூபாயைத் தந்து,
பாதுகாக்க வேண்டி.

'சீரான சபை வாழ்க' என்ற மெட்டு

பையன் கிழவனைப் பார்த்து

ஐயரே, எனக்கிப்போ தயல் தேசம்
போக வேண்டும்
மெய்யரே, வரும் வரை,
ஆயிரம் ரூபாயைக்
காப்பாற்றித் தருவீரே,
கண்ணியரே நீரும்,
கவலையில்லாமலே நான் போய்வரத்
துணை செய்வீர்—ஐயரே

கிழவன் பையனைப் பார்த்து

அன்புள்ள வாலிபனே, அப்படியே
செய்வேன் நான்
இன்பமாய்ப் போய் வருவாய், இஷ்டப்
படியே நீயும்—அன்புள்ள

பையன் திரும்பி வந்து கிழவனைப் பார்த்து

பணம் தருவீரே ஐயா,
பக்ஷமுடனே நீரும்
பண்ணிய உதவிக்கு, பத்து
நமஸ்காரம் (பணம்)

கிழவன் பையனைப் பார்த்து

பைத்தியங் கொண்டாயோ நீ,
பணமேது, கிணமேது
வைத்தியரிடம் போய் நீ,
வாங்குவாய் நல்மருந்தை (பை)

பையன் கிழவனைப் பார்த்து

ஏதையா இவ்விதமாய், இயம்புகிறீரே நீரும்
ஏதும்அறியார்போல, ஏமாற்றுகிறீர் என்னை(ஏ)

கிழவன் பையனைப் பார்த்து

பொய்யான வார்த்தைகளைப்
புகல்கின்றாய் வீணாய் இங்கே
பையனே என்னை விட்டுப்
போய் விடுவாயே நீயும் (பொ)

பையன் கிழவனைப் பார்த்து

நீதி ஸ்தலத்துக்குப் போய்
அறிவிப்பேன் இச்செய்தியை
வாதி நானாவேன் கேளும்,
பிரதிவாதி நீராவீர் (நீ)

கிழவன் பையனைப் பார்த்து

உன்னாலானதைப் பார்ப்பாய்,
உருட்டாதே ஓடிப்போடா
என்னாலானதை நானும்,
இயம்புவேன் கச்சேரியில் (உன்)

'ஸ்ரீராமச் சந்திரனே' என்ற மெட்டு (முதல் 2 அடி மட்டும்)

பையன் நீதிபதியைப் பார்த்து

அண்டை வீட்டுக் கிழவனிடம்
ஆயிரம் ரூபாயைத் தந்து
அயல் தேசம் போய் வந்தேனே
நான் நான் நான்
தந்த பணம் திரும்பக் கேட்டேன்
தரமாட்டேன் என்கிறானே
என்றனக்கு நியாயம் செய்வீர்
நீர் நீர் நீர்

நீதிபதி சேவகனைப் பார்த்து

சேவகனே கிழவனைப் போய்ச்
சீக்கிரமாய் அழைத்து வாடா
பாவம்பையன் வழக்கைக் கேட்பேன்
நான் நான் நான்

சேவகன் நீதிபதியைப் பார்த்து

அப்படியே கிழவனைப் போய்,
அழைத்து வருகிறேன் உங்கள்
சொற்படியே செய்வேன் ஐயா,
நான், நான், நான்.

*நீதிபதி கிழவனைப் பார்த்து*

கிழவனே பையனிடம்,
பணம் வாங்கிக் கொண்டதுண்டோ
அழுகிறான் ஐயோ பாவம்,
சொல், சொல், சொல்.

*கிழவன் நீதிபதியைப் பார்த்து*

நீதிமானே செப்புகிறேன்,
நிஜமாக ஓர் தொகையும்
வாதியிடம் வாங்கவில்லை,
மெய், மெய், மெய்.

*நீதிபதி பையனைப் பார்த்து*

வாதியான வாலிபனே,
வழக்குக்கொரு சாக்ஷியுண்டா
நீதி ஸ்தலத்திலே நீ,
சொல், சொல், சொல்.

*பையன் நீதிபதியைப் பார்த்து*

கொல்லை மரத்தடியில்,
கொடுத்தேன் நான் அப்பணத்தை
சொல்ல வேறு சாக்ஷியில்லை,
மெய், மெய், மெய்.

*நீதிபதி பையனைப் பார்த்து*

அம்மரத்தைச் சாக்ஷி சொல்ல,
அழைத்து வாடா வாலிபனே
சம்மதமாய் அது வருமே,
போ, போ, போ.

நீதிபதி கிழவனைப் பார்த்து

பிரதிவாதி சொல்வாயே நீ,
பாலனவன் இந்நேரத்தில்
மரத்தைத் தொட்டு இருப்பானோ,
சொல், சொல், சொல்.

கிழவன் நீதிபதியைப் பார்த்து

நீதிமானே அந்த மரம்,
நெடுந்தூரம் தானிருக்கும்
வாதி வேகம் அறிந்திடுவீர்,
நீர், நீர், நீர்.

பையன் திரும்பி வந்து, நீதிபதியைப் பார்த்து

ஆனமட்டும் அழைத்துப் பார்த்தேன்,
அசையாமல் நிற்கின்றது.
போனதுபோல் திரும்பி வந்தேன்,
நான், நான், நான்.

நீதிபதி பையனைப் பார்த்து

வாதியே அந்த மரம்,
வந்து இங்கே சாக்ஷி சொன்ன
செய்தியை நான் செப்புகிறேன்
கேள், கேள், கேள்.

நீதிபதி கிழவனைப் பார்த்து

பிரதிவாதிக் கிழவனே நீ
பணம் வாங்கினது உண்மை
உறுதியாய்ச் சொல்கின்றேன் நான்,
கேள், கேள், கேள்.

மரம் வெகு தூரம் என்ற,
வாக்கு மூலம் கொடுத்ததாலே
பரம் என்ற வாலிபனை,
நீ, நீ, நீ
மோசம் மிகச் செய்தாயென்று
வெட்டவெளியாயிற்று
பேசாமல் பணம் கொடுத்து,
நில், நில், நில்.
பத்து மாதச் சிறைவாசமும்,
பெற்றிடுவாய் பிற் காலத்தில்
புத்தியாகப் பிழைத்திடுவாய்
நீ, நீ, நீ

நீதிபதி பையனைப் பார்த்து

உண்மையுள்ள வாலிபனே,
உன் பொருளை எடுத்துச்செல்வாய்
நன்மை பல பெற்றிடுவாய்,
நீ, நீ, நீ.

பையன் நீதிபதியைப் பார்த்து

என்றன் பணம் வாங்கித் தந்த
எஜமானே உங்களுக்கு
வந்தனங்கள் செய்தேன் ஐயா,
நான், நான், நான்.

கிழவன் நீதிபதியைப் பார்த்து

புத்தியில்லாமலே நான்,
பணம் மோசம் செய்யப் பார்த்தேன்

சத்தியமாய் இனி நடப்பேன்,
நான், நான், நான்.

முடிவு

'வாசு தேவனே' என்ற மெட்டு

வஞ்சகம் செய்தோர், கொஞ்சமாகிலும்
நெஞ்சுதனில் இன்பம் கொள்ளார் நிச்சயமிது.
பாலர்களே நீர், பிறரை ஏமாற்றிக்
காலம் கழிக்க எண்ணினுல், கஷ்டமடைவீர்.

கிண்டர்கார்ட்டன் தொழில்கள்:—

(1) சித்திரம்—மனிதன், பையன் (Skeleton drawing), கடிகாரம், நாற்காலி.

(2) விதை வைத்தல்—மனிதன், பையன், கடிகாரம், நாற்காலி.

(3) குச்சி வைத்தல்—நாற்காலி.

(4) களிமண் வேலை—நாற்காலி, மனிதன், பையன்.

---

## 10. நல்ல பையனும் மோதிரமும்

ஒரு ஊரில் ஒரு கிழவர் இருந்தார். அவர் பணக்காரர். அவர் கை விரலில், ஒரு வைர மோதிரம் அணிந்திருந்தார். ஒரு நாள் அவர் ஒரு சாலை வழியாய்ப் போனுர். அவருடைய மோதிரம், வழியில் நழுவி விழுந்துவிட்டது. அவர் அதைக் கவனியாமல் போய்க் கொண்டிருந்தார்.

2. அவருக்குப் பின்னால் ஒரு பையன் அவ் வழியே போனான். அவன் மிகவும் நல்லவன். அவன் அந்த மோதிரத்தைக் கண்டெடுத்து, "இதை யாரோ வழியில் போட்டுவிட்டார்கள். விஷயம் அறிந்தால், மிகவும் வருத்தப்படுவார் கள். உடையவர் வந்து கேட்டால், இதைக் கொடுத்துவிட வேண்டும். சற்று நேரம் இங் கேயே, பாதை ஓரத்தில் தங்கியிருப்போம்" என்று தனக்குள் சொல்லிக் கொண்டு, பாதை ஓரத்தில் இருந்தான்.

3. இதற்குள் கிழவர், மோதிரத்தைத் தேடிக் கொண்டு திரும்பி வந்தார். மோதிரம் அதிக விலையுள்ள தாகையால், அவர் அழுது கொண்டே வந்தார். பையன் அவரைப் பார்த் துக் "கிழவனாரே, என்ன தேடுகிறீர்? வீணாய் அழவேண்டாம். என்னிடம் உள்ள சங்கதி யைச் சொல்லும்" என்றான். அவர் "அப்பா, சற்று நேரத்துக்கு முன், நான் இவ்வழியாய் வந்தேன். என்னுடைய வைர மோதிரம் ஒன்று வழியில் தவறிவிட்டது. அதைத் தேடி வருகி றேன்" என்றார்.

4. உடனே பையன், கிழவரிடம் தன் கையி லிருந்த மோதிரத்தைக் காட்டிக், "கிழவனாரே, இதோபாரும். இதுதானா உம்முடையமோதிரம்? பதறாமல் பார்த்துச் சொல்லும். உடையவரிடம் இதைக்கொடுப்பதற்காகவே, நான் இங்கே நிற்கி


1
2
3
4
5
6

றேன். இது உம்முடையதானுல், இப்போதே வாங்கிக்கொள்ளும்'' என்று சொன்னுன். கிழவர் அதைப்பார்த்ததும்,பேரானந்தங்கொண்டு, "ஆம், அப்பா, இதுதான் என்னுடையது" என்ருர். பையன் சந்தோஷத்துடன், கிழவரிடம் மோதிரத்தைக் கொடுத்தான். கிழவர் அதைப் பெற்றுக்கொண்டு, "அன்பான வாலிபனே, நீ சிரஞ்சீவியா'யிருந்து, பல நன்மைகள் பெறுவாய். உன் புகழ் உலகத்தில் ஓங்கி வளரும்'' என்று சொல்லிப் பையனே வாழ்த்திப் போனுர்.

5. நாம் பிறர் பொருளுக்கு ஆசைப்படக் கூடாது.

பாட்டு

'நல்வாக்கு நீ கோடடி' என்ற மெட்டு

(கோவலன் சரித்திரம்)

பையன் மோதிரத்தைக் கண்டெடுத்துத் தனக்குள்

அழகான மோதிரத்தை
வழியிலே யாரோ இங்கே
நழுவவிட்டுப் போனுரே
அழுவாரே இதை அறிந்தால்.
உடையவர் வந்து கேட்டால்
தடையின்றி நான் கொடுப்பேன்
நடைப்பாதை ஓரத்திலே
நானிங்கே காத்திருப்பேன்.

கிழவர் மோதிரம் தவறினதை அறிந்து தனக்குள்

ஐயோ நான் என்ன செய்வேன்
அழகான மோதிரத்தை
வழியிலே நழுவ விட்டேன்
வந்த வழி திரும்பிப் பார்ப்பேன்.

பையன் மோதிரம் தேடிவரும் கிழவரைப் பார்த்து

என்ன நீர் தேடுகிறீர்
இந்நேரம் பாதையிலே
கிழவரே செப்பிடுவீர்
அழவேண்டாம் வீணாக நீர்

கிழவர் பையனைப் பார்த்து

வைர மோதிரம் ஒன்றை
வழியிலே தவறவிட்டேன்
அதைத் தேடி வருகிறேன் நான்
அன்பான வாலிபனே

பையன் மோதிரத்தைக் காட்டிக், கிழவரைப் பார்த்து

இது தானா உம்மோதிரம்
பதறாமல் பார்த்திடுவீர்
இதுவானால் எடுத்துக் கொள்வீர்
அதுவே என் எண்ணமாகும்

கிழவர் பையனைப் பார்த்து

என் மோதிரம் இதுவே
அன்பான வாலிபனே
நன்மைகள் பல பெறுவாய்
உன்புகழ் ஓங்கி வரும்.

TB 03(2) N34
8870
சென்னை-600 008

Printed at the Royal Printing Works, Mount Road, Madras.

# எமது பிரசுரங்கள்

| | | | |
|---|---|---|---|
| செந்தமிழ் வாசக பாடம் முதல் புத்தகம் | 0 | 2 | 6 |
| ஷை இரண்டாவது ,, | 0 | 3 | 0 |
| மாணவர் தமிழ்ப் புத்தகம் | | | |
| முதல் வகுப்பு | 0 | 2 | 0 |
| இரண்டாம் ,, | 0 | 3 | 0 |
| மூன்றும் ,, | 0 | 4 | 0 |
| நான்காம் ,, | 0 | 5 | 0 |
| ஐந்தாம் ,, | 0 | 6 | 0 |
| ஆறும் ,, (1-ம் பாரம்) | 0 | 7 | 0 |
| ஏழாம் ,, (2-ம் பாரம்) | 0 | 8 | 0 |
| எட்டாம் ,, (3-ம் பாரம்) | 0 | 9 | 0 |
| திருநெல்வேலி ஜில்லாச் சரித்திரக் கதைகள் | 0 | 4 | 6 |
| இந்திய சரித்திரக் கதைகள் | 0 | 5 | 0 |
| திருநெல்வேலி ஜில்லா பூமி சாஸ்திரம் | 0 | 5 | 0 |
| சென்னை ராஜதானி பூமி சாஸ்திரம் | 0 | 8 | 0 |
| கதைகளும் பாட்டுகளும் | | | |
| (முதற் பாகம்) | 0 | 3 | 0 |
| (இரண்டாம் பாகம்) | 0 | 4 | 0 |
| நீதிக் கதா மஞ்சரி:—உலகநீதி | 0 | 2 | 0 |
| கொன்றைவேந்தன் | 0 | 2 | 0 |
| ஆத்திசூடி | 0 | 2 | 0 |
| வெற்றிவேற்கை | 0 | 3 | 0 |
| எண்சுவடி | 0 | 1 | 6 |

SCANNED
SCANNED

எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை
புத்தக வியாபாரம், திருநெல்வேலி ஜங்ஷன்